கிராமங்களில் மண்பாண்டத் தொழில்

* 97 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மண்பாண்டத் தொழிலை எல்லா கிராமங்களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

* 98 வினா.—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கட்கு கதர்—கிராமத் தொழில் வாரியம் மூலமாக தொழிற் கருவிகள் வழங்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, புது வகை சக்கரங்கள், அச்சுகள் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

Price of mud pots in Salem district

* 99 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact that the price of the mud pots has gone up in Salem district during August 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கதர்-கிராமத் தொழில் வாரியத்தால் செய்யப்படும் மண்பாண்டங்களுடைய விலையில் விலை ஏற்றம் எதுவும் இல்லை.

மெரினாவில் புதிய கலங்கரை விளக்கு

* 100 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெரினா கடற்கரையில் புதிய கலங்கரை விளக்கு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

(இ) ஆமெனில், எவ்வளவு தொகையில் கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே.

(அ) ஆம்.

(இ) ரூ. 13,23,000.

1972 சனவரி 28]

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்தக் கலங்கரை விளக்கம் எந்த இடத்தில் கட்டப்படவிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மெரினா கடற்கரையில் கட்டப்படுவதாக இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : மெரினா கடற்கரை என்றால், பல மைல் நீளம் இருக்கிறது. எங்கே கட்டப்படும் என்பதை கனம் அமைச்சர் தெரிவிப்பாரா? அதன் காரணமாக, இப்போது ஹைகோர்ட்டில் இருக்கும் கலங்கரை விளக்கத்தின் கதி என்ன ஆகும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : அது ஹைகோர்ட்டுக்குப் பக்கத்தில் அல்ல. அதற்குத் தெற்குப் பக்கமாக உள்ள இடத்தில்—ஒரு குறிப்பிட்ட இடத்தில் கட்டுவதாக இருக்கிறது. அதை 50 அடி வடக்கே தள்ளிக் கட்டுவதா, அல்லது தெற்கே தள்ளிக் கட்டுவதா என்பதைப் பற்றி இன்னும் முடிவாகவில்லை.

நவீன அரிசி ஆலைகள்

***101 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தற்போது நவீன அரிசி ஆலைகள் எங்கெங்கு உள்ளன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இந்த நவீன அரிசி ஆலைகள் தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர், தஞ்சாவூர், கும்பகோணம், மாயூரம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை ஆகிய ஆறு இடங்களிலும், செங்கல்பட்டு, செய்யாறு, கள்ளக்குறிச்சி, திருச்சி, மதுரை, திருநெல்வேலி மற்றும் பொள்ளாச்சி ஆகிய 7 இடங்களிலும் இருந்து வருகின்றன.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, இதில் நஷ்டத்தில் ஓடுகிற நவீன ஆலைகள் எவை? அந்த நஷ்டங்களைப் போக்குவதற்கு அரசு எடுக்க இருக்கிற முயற்சிகள் யாவை என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி பா. ஆதித்தனர் : எல்லா நவீன அரிசி ஆலைகளுமே நஷ்டத்தில்தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவைகள் இப்போது தனித்தனியாக கூட்டுறவு கழகங்களின் மூலம் நடைபெற்று வருகின்றன. ஒருங்கிணைத்து நஷ்டமின்றி நடத்த, இவற்றையெல்லாம் உணவுத் துறையிடத்தில் ஒப்படைப்பதற்கான ஒரு செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத்தலைவரவர்களே. இந்த அரிசி ஆலைகளில் நாளொன்றுக்கு எவ்வளவு மூட்டை அரிசி அரவை செய்யப்படுகிறது என்று அறிவிக்க இயலுமா?